
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1027

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

137

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பேராசிரியர் அ.அய்யாசாமி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# பேராசிரியர் அ.அய்யாசாமி

## திராவிட எழுத்தில் இலட்சியப் பயணம்!

ஓவியம் : ரவி பேலட்



2011-ஆம் ஆண்டு, ஜனவரி 16-ஆம் தேதி, சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழா இனமானப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விருது வழங்கி சிறப்புரையாற்றினார் கழகத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த விழாவில், திருவள்ளுவர் விருது, பெரியார் விருது, அண்ணா விருது, அம்பேத்கர் விருது என தலைவர்களின் பெயரிலான விருதுகளில், திரு.வி.க. விருதினைப் பெற்றார் பேராசிரியர் அ.அய்யாசாமி. “தமிழை நேசித்தவர் மாத்திரமல்ல; பூசித்தவராகவும், தமிழுக்கு தனிப்பெரும் சிம்மாசனம் போடப்பட வேண்டும் என்று கருதியவராகவும், பல பணிகளைச் செய்தவர்” என கலைஞரால் அன்று பாராட்டப்பெற்றவர் பேராசிரியர் அ.அய்யாசாமி. பின்னாட்களில் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில், பெரியார் விருதினைப் பெற்ற பேராளர். கழகத்தில் நேரடி அரசியலில் ஈடுபடாத பெருந்தொண்டர்.

“தன் வாழ்நாள் முழுவதும் திராவிட இயக்கக் கொள்கைகளைத் தனது எழுத்தாற்றலின் வாயிலாகவும், மொழிபெயர்ப்புத் திறன் மூலமாகவும் அனைத்துத் திசைகளுக்கும் கொண்டு சென்றவர் பேராசிரியர் அய்யாசாமி” என இன்றைய கழகத் தலைவர் போற்றிய கலைஞரின் உடன்பிறப்பு.

### அன்பால் ஈர்க்கப்பட்டவர்

மாணவப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் செயல்பாடுகளில் பங்கு கொண்டவர் பேராசிரியர் அ.அய்யாசாமி. பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்பால் ஈர்க்கப்பட்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கிய மாணவராகக் கல்வி பயின்ற காலத்தில், அங்கு திராவிட மாணவர் மன்றத்தில் முக்கியப் பங்காற்றியவர். இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தின் மையமாக இருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கழக முன்னோடிகள் பலரோடு இணைந்து மாணவர்களை ஒருங்கிணைத்தவர்களில் ஒருவராக அய்யாசாமி அவர்கள் செயல்பட்டவர்.

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டியில் 1940-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் அமிர்தலிங்கம் - லட்சுமி அம்மாள். தொடக்கக் கல்வியை சொந்த ஊரிலும், உயர்கல்வியை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் முடித்தவர். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்று, ஆங்கிலப் பேராசிரியராக பணியாற்றத் தொடங்கினார். பின்னர் தமிழ் இலக்கியத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றார்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நடைபெற்ற அனைத்து மாநாடுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றியவர். ‘இலக்குவனார் இலக்கிய மன்றம்’, ‘தமிழ் கவிஞர் மன்றம்’, ‘இந்திய மக்கள் நாடக மன்றம்’ என பல அமைப்புகள் வழியிலும், தனிப்பட்ட முறையிலும் தமிழ் மொழி, இலக்கியம், தமிழர் சமூக நலன், திராவிட இயக்க கருத்தியல் பரப்புரை என தொடர்ச்சியாக இயங்கியவர்.

### எழுத்துப் பணிகளில் இயக்கம்

திராவிட இயக்கத்தின் பல நூல்களை, தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்துள்ளார். குறிப்பாக, தலைமைக் கழகத்தின் சார்பில், இவர் எழுதிய *‘A Concise History of DMK’* எனும் ஆங்கில நூலை, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையேற்று வெளியிட்டுள்ளார். கழகத்தின் ஆங்கில ஏடான *‘The Rising Sun’* இதழில் 400-க்கும் அதிகமான கட்டுரைகளை எழுதி இருக்கிறார். பேரறிஞர் அண்ணாவின் படைப்புகளின் சுருக்கம் என சாகித்ய அகாடமி நிறுவனத்துக்காக ஆங்கிலத்தில் இவர் எழுதிய நூல், அதிகம் கவனம் பெற்றது.

பேராசிரியர் பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், தொடர்ச்சியாக திராவிடக் கருத்தியலைப் பேசும் படைப்புகளுக்காக நேரம் செலவிடத் தொடங்கினார். ஒரே நேரத்தில் ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றவராக இருந்ததால், திராவிடக் கருத்தியலை ஆங்கிலத்தில் ஆக்கப் பணிகளில் கவனம் செலுத்தினார். *Modern rationalist* தளத்தில் தொடர்ச்சியாக ஆங்கிலத்தில் திராவிட இயக்கம், தி.மு.க.வின் அரசியல் பண்பாட்டுத் தாக்கம் குறித்த கட்டுரைகளை எழுதி வந்தார்.

வடமொழியில் வெளியான நாடகத்தை ‘நாகானந்தம்’ என தமிழில் கொண்டு வந்தார். ‘வைக்கம்’ எனும் கவிதை நாடகத்தை அரங்கேற்றினார். அறிஞர் அண்ணா குறித்த திறனாய்வு, அரசியல் பணிகளைப் பேசும் நூல்கள் என இவரது படைப்புகள் கழக வரலாற்றை ஆங்கிலத்தில் கொண்டு செல்லும் முயற்சியாக இருந்தன. குறிப்பாக, தந்தை பெரியார் தலைமை தாங்கி நடத்தி, வெற்றி கண்ட வைக்கம் போராட்ட வரலாற்றை, ஆங்கிலத்தில் எழுதினார். திராவிடர் கழக வெளியீடாக அந்நூல் வெளிவந்தது.

### உலக அரங்குகளில் திராவிடக் கருத்துகள்!

தமிழ்நாடு மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் பல பல்கலைக்கழகங்களில் திராவிடக் கருத்தியல் குறித்து உரைகளை நிகழ்த்தியவர். ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி இருக்கிறார். அதற்காக, திராவிடர் கழகத்தால் பாராட்டப் பெற்றவர் அய்யாசாமி. அதன் தொடர்ச்சியாகவே, இவரது எழுத்துப் பணிகளுக்கான 2010-ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் திரு.வி.க. விருதினை வழங்கி சிறப்பு செய்தது அரசு.

குறிப்பாக, இவரது இரண்டு நூல்கள் தமிழ்நாடு அரசின் சிறந்த நூல்கள் பரிசினைப் பெற்றுள்ளன. அரசின் சார்பில் மட்டுமல்ல; கழகத்தின் சார்பிலும், இவரது பணிகளைப் பாராட்டி, 2016-ஆம் ஆண்டில் முப்பெரும் விருதுகளில் பெரியார் விருது வழங்கி, சிறப்பு செய்தது தலைமைக் கழகம். தலைவர் கலைஞர் அந்த விருதினை வழங்கி சிறப்பு செய்தார்.

2019-ஆம் ஆண்டு, ஜூன் 16-ஆம் தேதி, தனது 78-வது வயதில் வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக, மறைவெய்திய திராவிடப் பேராசிரியருக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் இறுதி மரியாதை செய்யப்பட்டது. கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில், ‘திராவிட இயக்கச் சிந்தனைகளில் ஈடுபட்டிருந்தவரும், திராவிட இயக்கத்தின் இலட்சியங்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவருமான பேராசிரியர்’ என பெருமை சேர்த்திருந்தார்.

தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்பது, தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் உறுதி செய்த நிலைபாடு. ஒரே நோக்கத்திற்கான இரு பிரிவுகள். அதை மிகச் சரியாக செவ்வனே நடத்திக் காட்டினார் கலைஞர். அந்தக் கருத்தியல் தளத்தில் பலரை இயங்க வைத்து, பலரை இயக்கி, திராவிடக் கருத்தியல் பிரச்சாரத்தைக் கொண்டு சேர்த்தவர், முத்தமிழறிஞரின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் இயங்கியவர் பேராசிரியர் அ. அய்யாசாமி. கழகக் கருத்தியல் வரலாற்றில் என்றும் நினைக்கப்படுவார்.

> “கருத்தியல் தளத்தில் பலரை இயங்க வைத்து, பலரை இயக்கி, திராவிடக் கருத்தியல் பிரச்சாரத்தைக் கொண்டு சேர்த்தவர், முத்தமிழறிஞரின் எண்ணத்தை ஈடேற்றும் வகையில் இயங்கியவர் பேராசிரியர் அ.அய்யாசாமி.”

...துடிக்கும்

## திருக்குறளைப் பரப்பும் ஆவணப்படம்!

உலகின் பல்வேறு மொழிகளில் திருக்குறள் ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தற்போது காணொலி வடிவிலும் அதன் பெருமைகளை உலகுக்கு உணர்த்தும் பணிகள் தொடங்கியுள்ளன. வாஷிங்டன் தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ஆர். பிரபாகரன் எழுதி தயாரித்துள்ள, ‘The Ageless Wisdom of the Indian Poet Philosopher Thiruvalluvar’ என்ற திருக்குறள் பற்றிய ஆவணப்படம் நவம்பர் 16 அன்று ஹார்வர்டு பல்கலைக்கழக தமிழிருக்கையின் Tamil Chair Inc யூடியூப் சேனலில் வெளியிடப்பட்டுள்ளது.

33.34 நிமிடங்கள் கொண்ட இந்த ஆவணப்படம் குமரி முனையில் வானுயர்ந்து நிற்கும் திருவள்ளுவரின் கம்பீரச் சிலையுடன் தொடங்குகிறது. சென்னை வள்ளுவர் கோட்டம் முதல் பிரிட்டன், பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை என உலக நாடுகளில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலைகள் வரிசையாக இந்த ஆவணப்படத்தில் அணி வகுக்கின்றன. திருக்குறளின் பெருமைகள், முப்பால் உணர்த்தும் வாழ்வியல் அறங்களை காட்சிகளுடன் விவரிக்கிறது இந்த காணொளி. பாரதி, சர்.சி.வி.ராமன் உள்ளிட்ட பலரின் வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படங்களாக உருவாக்கிய அம்ஷன் குமார் இந்த ஆவணப்படத்தை இயக்கியுள்ளார்.

தமிழிருக்கையின் தலைவர் ஜானகிராமன், வட அமெரிக்க தமிழர்களின் நிதியுதவியில் இந்த ஆவணப்படம் உருவாகியுள்ளது. தற்போது ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள இந்த ஆவணப்படம், தமிழ், இந்தி, பிரெஞ்சு மற்றும் ஜப்பானிய மொழிகளிலும் வெளியாகவுள்ளது. திருக்குறள் உலகளாவியது, மதச்சார்பற்றது, இன்றைக்கும் பொருத்தமானது. எழுத்து வடிவில் மட்டுமே உலக நாடுகளுக்கு அறிமுகமாகியுள்ள திருக்குறளை காணொலி வடிவிலும் கொண்டு சேர்க்கும் இம்முயற்சி பாராட்டத்தக்கது.

வீடியோவை காண இந்த க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்

## ஃப்ளாஷ்பேக்





எம்.சிவ சிதம்பரம்

### கழகப் பயணத்தின் அடையாளம்!

2014-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி, எனது பிறந்த நாளையொட்டி, தானைத் தலைவர், தமிழ்நாட்டின் காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றேன். அவரைப் பார்த்து, புகைப்படம் எடுத்துக் கொண்ட அந்த நிமிடங்கள் என் வாழ்வில் மறக்க முடியாது. இந்தப் படம் என் கழகப் பயணத்தின் அடையாளம்.

**– எம்.சிவ சிதம்பரம், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், அண்ணா நகர் தெற்கு, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### திருச்செங்கோடு இடைத்தேர்தல்!

1962-ஆம் ஆண்டு, திருச்செங்கோடு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சுப்பராயன், பம்பாய் ஆளுநராக நியமிக்கப்பட்டதால், அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளராக செ.கந்தப்பன் போட்டியிட்டார். கழக முன்னணியினர் அனைவரும் விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், என்.வி.நடராசன் அவர்கள் மட்டுமே தொகுதியில் இருந்து தேர்தல் பணியாற்றினார். கடுமையான போட்டியில், கந்தப்பன் வெற்றி வாகை சூடினார். சிறையில் இருந்த தலைவர்கள், ‘கழகம் வாழ்க! கந்தப்பன் வாழ்க’ என முழக்கம் எழுப்பினர்.